நேரடி கள ஆய்வை தொடங்குவதன் மூலம்

‘மக்களுக்காகத்தான் அரசு’ என்பதை நிரூபிக்கிறார் மக்கள் முதல்வர்!

சென்னை, அக். 27-

நேரடி கள ஆய்வு மேற்கொண்டால்தான் மக்களின் மனங்களை வெல்ல முடியும் என்பதை முதல்வர் மு.க.ஸ்டாலின் நன்கு அறிந்து வைத்துள்ளார். நேரடி கள ஆய்வை தொடங்கி “மக்களுக்காகத்தான் அரசு” ன்பதை நிரூபிக்கப் போகிறார் மக்கள் முதல்வர் மு.க. ஸ்டாலின் என “தினகரன்” நாளேடு தலையங்கத்தில் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

அது வருமாறு:-

தமிழ்நாட்டு மக்களின் பேராதரவுடன் முதல்வராக பதவி ஏற்ற மு.க. ஸ்டாலின் அவர்கள், வாக்குறுதிகளாக சொன்னது போக சொல்லாத பல மக்கள் நல திட்டங்களை யும் அறிவித்து அவற்றை செயல்படுத்தி வருகிறார். அந்த வகையில் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் பயன்பெறும் திட்டங்களை செயல்படுத்தும் அரசாக தமிழ்நாடு அரசு திகழ்கிறது. திட்டங் களை அறிவித்து செயல்படுத்து வதோடு மட்டுமல்லாமல் அவற்றின் செயல்பாடு களை கள ஆய்வு செய்யும் முதல்வராகவும் மு.க. ஸ்டாலின் அவர்கள் விளங்கு கிறார்.

மக்களுக்காகத்தான் அரசு, மக்களை மையப் படுத்தி இயங்குவதுதான் நல்லரசு. அரசு அலுவல கங்கள், மருத்துவமனை களை நாடி வரும் மக்கள் மனநிறைவுடன் திரும்பிச் செல்லும் வகையில் பணியாற்ற வேண்டியது அரசின் அங்கமாக இருக்கும் ஒவ்வொருவரின் கடமை. அதை உறுதிப்படுத்த நான் மேற்கொள்ளும் ஆய்வுகள் தொடரும் என அந்த கள ஆய்வின் முக்கியத்துவத்தை பல்வேறு அரசுத்துறை ஆய்வுக் கூட்டங்களிலும் முதல்வர் வலியுறுத்தி வந்துள்ளார்.

‘கள ஆய்வில் முதல மைச்சர்’ என்ற திட்டத்தின் படி அமைச்சர்கள், அரசுத்துறை செயலர்கள், துறைத் தலைவர்களுடன் மாவட்டங்கள் தோறும் செயல்படுத்தப்படும் திட்டப்பணி களை முதல்வர் ஆய்வு செய்து வந்தார். அந்த பணிகளை இந்த மாதத்துடன் முடிக்கவும் திட்ட மிட்டுள்ளார். அண்மையில் நாமக்கல்லில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சி யில் இதனை நினைவுப் படுத்திய முதல்வர், “திராவிட மாடல் ஆட்சியில் அறிவிக்கப்படும் திட்டங்கள் அனைத்தும் நிச்சயம் நிறைவேற்றப் படும்” என்ற உறுதிமொழியை வழங்கி னார்.

மேலும் அரசின் திட்டங்களை செயல்படுத்தும் முறையைக் கண்காணிப்பதற்காக நவம்பர் மாதம் முதல் தானே நேரில் களத்தில் இறங்கப்போவதாகவும் கூறியிருந்தார். அதன்படி, “தமிழ்நாடு அரசு அறிவிக்கும் திட்டங்களை முழுமையாக நிறைவேற்றும் என்ற நம்பிக்கையுடன் உள்ள தமிழ்நாட்டு மக்களின் எதிர்பார்ப்பை நிறை வேற்றும் வகையில், நவம்பர் 5, 6ம் தேதிகளில் கோவைக்கு சென்று கள ஆய்வை தொடங்க உள்ளேன். மற்ற மாவட்டங்களிலும் கள ஆய்வு தொடரும். திராவிட மாடல் அரசின் சாதனைத் திட்டங்களும் தொடரும்” என நேற்று அவர் தொண்டர்களுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள் ளார்.

ஒரு மாநிலத்தின் முதல்வர் என்பவர் திட்டங்களை அறிவித்து விட்டு தலைமை செய லகத்தில் அமர்ந்து கொண்டு அரசாங்கத்தை நடத்த முடியும். ஆனால் அரசு அறிவிக்கும் தி ட்டங்கள் முழுமையாக செயல்படுத்தப் படுகிறதா?, மக்களுக்கு சென்றடைந்துள்ளதா?, திட்டத்தினால் எத்தனை பேர் பயனடைந்துள்ளனர்?, திட்டங்களால் சமூகத்தில் என்னென்ன மாற்றங்கள் நிகழ்ந்துள்ளது? என்பதை நேரில் சென்று அறிய வேண்டும் என நினைப்பதில் தமிழ்நாடு முதல்வருக்கு இணை யாரும் இல்லை எனலாம்.

அரசின் தலைமை அமைச்சராக இருக்கும் முதல்வரே நேரடியாக சென்று கள ஆய்வு மேற்கொள்ளும்போது, அரசு இயந்திரம் எந்தளவிற்கு முழுவீச்சுடன் செயல்படும் என்பதை உணர முடியும். கோட்டையில் அமர்ந்து கொண்டு பெயரளவில் திட்டங்களை அறிவித்து விட்டு தேர்தல் நேரத்தில் மேடையில் ஏறி வெற்று முழக்கம் இடுவது எந்த பலனையும் தராது.

இதுபோன்ற நேரடி கள ஆய்வு மேற்கொண்டால் தான் மக்களின் நாடியை பிடித்து பார்க்க முடியும். அரசின் திட்டங்கள் முழுமை யாக மக்களுக்கு சென்று மக்களின் மனங்களை வெல்லமுடியும். அரசு நிர்வாகத்தை மேலும் செம்மைப்படுத்த நல்வாய்ப்பாக அமையும் என்பதை தமிழ்நாடு முதல்வர் நன்கு அறிந்து வைத்துள்ளார். அந்த வகையில் தனது நேரடி கள ஆய்வை தொடங்கி ‘மக்களுக்காகத் தான் அரசு’ என்பதை நிரூபிக்கப்போகிறார் மக்கள் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

தினகரன்

அக்டோபர் 26, 2024 சனிக்கிழமை

மக்களின் அரசு

தமிழ்நாட்டு மக்களின் பேராதரவுடன் முதல்வராக பதவி ஏற்ற மு.க. ஸ்டாலின், வாக்குறுதிகளாக சொன்னது போக சொல்லாத பல மக்கள் நல திட்டங்களையும் அறிவித்து அவற்றை செயல்படுத்தி வருகிறார். அந்த வகையில் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் பயன்பெறும் திட்டங்களை செயல்படுத்தும் அரசாக தமிழ்நாடு அரசு திகழ்கிறது. திட்டங்களை அறிவித்து செயல்படுத்துவதோடு மட்டுமல்லாமல் அவற்றின் செயல்பாடுகளை கள ஆய்வு செய்யும் முதல்வராகவும் மு.க. ஸ்டாலின் விளங்குகிறார்.

மக்களுக்காகத்தான் அரசு, மக்களை மையப்படுத்தி இயங்குவதுதான் நல்லரசு. அரசு அலுவலகங்கள், மருத்துவமனைகளை நாடி வரும் மக்கள் மனநிறைவுடன் திரும்பிச் செல்லும் வகையில் பணியாற்ற வேண்டியது அரசின் அங்கமாக இருக்கும் ஒவ்வொருவரின் கடமை. அதை உறுதிப்படுத்த நான் மேற்கொள்ளும் ஆய்வுகள் தொடரும் என அந்த கள ஆய்வின் முக்கியத்துவத்தை பல்வேறு அரசுத்துறை ஆய்வுக் கூட்டங்களிலும் முதல்வர் வலியுறுத்தி வந்துள்ளார்.

திருவள்ளூரில் மார்பக புற்றுநோய் விழிப்புணர்விற்காக அப்போலோ கேன்சர் சென்டர்ஸ் மற்றும் வானகரம் அப்போலோ ஸ்பெஷாலிட்டி ஆஸ்பிட்டல்ஸ் ஆகியவை ஒருங்கிணைந்து & பெடல் பிங்க்& என்ற பெயரில் ஒரு சைக்கிளத்தான் பேரணியை தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழும் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தொடங்கி வைத்து சைக்கிள் ஓட்டினார் உடன் மாவட்டக் கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, புற்றுநோயியல் துறை தலைவர் டாக்டர் எஸ்.சுரேஷ் புற்றுநோயியல் அறுவைசிகிச்சை துறை தலைவர் டாக்டர்.எஸ்.கௌதமன், நிர்வாக அலுவலர் ஸ்ரீபால், முதுநிலை ஆலோசகர் டாக்டர் கே.ஹரீஷ்குமார், முதுநிலை நிபுணர் டாக்டர் மதுபிரியா, மாநில நிர்வாகிகள் ஆர்.டி.இ.ஆதிசேஷன், சி.ஜெரால்டு, நகர செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன், நகர மன்ற தலைவர் உதயமலர்பாண்டியன், ஒன்றிய செயலாளர் ச.மகாலிங்கம், உட்பட பலர் கலந்து கொண்டார்கள்

‘கூட்டுறவுக் கொண்டாட்டம்’ என்ற பெயரில் – தமிழகம் முழுவதும்

அனைத்து கூட்டுறவு கடைகளிலும் - தீபாவளி சிறப்புத் தொகுப்பு விற்பனை!’

அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தகவல்!

சென்னை, அக். 27-

கூட்டுறவுத்துறையின் மூலம் தீபாவளி பண்டிகையை அனைத்துத் தரப்பு மக்களும் சிறப்பாக கொண்டாடும் வகையில் “கூட்டுறவு கொண்டாட்டம்” என்ற பெயரில் தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து கூட்டுறவு விற்பனை பண்டகசாலைகள் மூலம் தீபாவளி சிறப்புத் தொகுப்பு விற்பனை நாளை (28.10.2024) முதல் நடைபெறவுள்ளது என கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தகவல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் நேற்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ள தாவது:-

உறவுகள் ஒன்று கூடி நிறைவுபெற்று, மகிழ்ச்சி பொங்கி மனம் நிறைந்து கொண்டாடுவதே தீப ஒளித் திருநாளான தீபாவளியாகும். அத்தகைய தீபாவளியினை ஏழை, எளிய, நடுத்தர மக்கள் என அனைத்து தரப்பு மக்களும் சிறப்பாக கொண்டாடி மகிழ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் பல்வேறு முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன்படி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின் படி, கூட்டுறவுத் துறையின் மூலம் நடத்தப்பட்டு

வரும் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள், பிரதம பண்டகசாலைகள் நடத்தும் 65 சுய சேவைப் பிரிவுகள் மற்றும் 54 பல்பொருள் அங்காடிகளில் ”கூட்டுறவு கொண்டாட்டம்” என்ற பெயரில் மளிகைப்பொருட்கள் அடங்கிய தீபாவளி சிறப்புத் தொகுப்பு விற்பனை நாளை (28.10.2024) முதல் நடைபெறவுள்ளது.

இந்த மளிகைப் பொருட்கள் அடங்கிய தீபாவளி சிறப்புத் தொகுப்பு, பிரீமியம் (Premium) மற்றும் எலைட் (Elite) என இரண்டு வகையாக அறிமுகப்படுத்தப் படவுள்ளது.

பிரீமியம் (Premium) தொகுப்பில் துவரம் பருப்பு 200 கிராம், உளுத்தம்பருப்பு 200 கிராம், கடலை பருப்பு 200 கிராம், வறுகடலை (குண்டு) 100 கிராம், மிளகு 25 கிராம், சீரகம் 25 கிராம், வெந்தயம் 50 கிராம், கடுகு 50 கிராம், சோம்பு 50 கிராம், நீட்டு மிளகாய் 100 கிராம், தனியா 100 கிராம், புளி100 கிராம், ரவை100 கிராம், ஏலக்காய் 5 கிராம் என 14 வகையான பொருட்கள் அடங்கிய தீபாவளி சிறப்புத் தொகுப்பு ரூ.199/ என்ற விலையில் விற்பனை செய்யப்படவுள்ளது.

மேலும், எலைட் (Elite) தொகுப்பில் துவரம்பருப்பு 250 கிராம், உளுத்தம்பருப்பு 250 கிராம், கடலை பருப்பு 250 கிராம், வறுகடலை (குண்டு) 200 கிராம், மிளகு 50 கிராம், சீரகம் 50 கிராம், வெந்தயம்50 கிராம், கடுகு 50 கிராம், சோம்பு 50 கிராம், நீட்டு மிளகாய் 250 கிராம், தனியா 200 கிராம், புளி100 கிராம், ரவை 100 கிராம், ஏலக்காய்5கிராம் என 14 வகையான பொருட்கள் அடங்கிய தீபாவளி சிறப்புத் தொகுப்பு ரூ.299/ என்ற விலையில் விற்பனை செய்யப்படவுள்ளது.

அது மட்டுமல்லாது, தீபாவளி பண்டிகையை தமிழர்கள் அளவிற்கு சிறப்பாக கொண்டாடுபவர்கள் யாவரும் இல்லை. தீபாவளி பண்டிகையில் எவ்வாறு பட்டாசுகள் தனி இடத்தைப் பிடிக்கின்றதோ அதேபோல இனிப்புகளும் முதலிடம் பெறுகின்றன. பொது வாக தீபாவளியன்று இனிப்புகள் நிறைய செய்து ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்வது வழக்கம்.

அதற்கேற்றார் போல தீபாவளி சிறப்புத் தொகுப்பு விற்பனையில் “அதிரசம்முறுக்கு காம்போ” என்ற விற்பனை தொகுப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த “அதிரசம் முறுக்கு காம்போ” தொகுப்பில் பச்சரிசி மாவு 500 கிராம், பாகு வெல்லம் 500 கிராம், ஏலக்காய் 5 கிராம், மைதா மாவு 500 கிராம், Sunland/ Goldwinner Sunflower Oil 1/2 லிட்டர் என 5 வகையான பொருட்கள் அடங்கிய தீபாவளி சிறப்புத் தொகுப்பு ரூ.190/ என்ற விலையில் விற்பனை செய்யப்படவுள்ளது.

இந்த தொகுப்புகள் அனைத்து வெளி சந்தையில் கிடைப்பதை விட குறைவான விலைக்கே விற்பனை செய்யப்படுகிறது. எனவே, கூட்டுறவுத் துறையின் மூலம் “கூட்டுறவு கொண்டாட்டம்” என்ற பெயரில் தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து கூட்டுறவு விற்பனை பண்டக சாலைகள் மூலம் தீபாவளி சிறப்புத் தொகுப்பு விற்பனையினை வாங்கி அனைத்து தரப்பு மக்களும் சிறப்பாக தீபாவளி பண்டிகையை கொண்டாடி மகிழ கேட்டுக்கொள்கிறேன் என கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில்

வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் பணியில் முழுமையாக ஈடுபடுவீர்!

மாவட்ட செயலாளர் தே.மதியழகன் எம்எல்ஏ அறிக்கை!

கிருஷ்ணகிரி, அக்.27-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் அறிவுறுத்தலின்படி இந்திய தேர்தல் ஆணையம் வருகின்ற 01.01.2025 தகுதியேற்படுத்தும் நாளாகக் தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட புகைப்படத்துடன் கூடிய வரைவு வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் 29.10.2024 அன்று வெளியிட உள்ளது.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட கிருஷ்ணகிரி, பர்கூர், ஊத்தங்கரை சட்டமன்ற தொகுதிகளில் 29.10.2024 முதல் 28.11.2024 வரை வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும், திருத்தம் செய்யவும் மனு செய்ய காலஅவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

இதுதவிர தலைமை தேர்தல் அதிகாரி அறிவிப்பின் படி 09-11-2024 - 10-11-2024 மற்றும் 23-11-2024, 24-11-2024 சனி ஞாயிறு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் காலை 0930 மணி முதல் மாலை 0530 மணி வரை சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளது.

அதன்படி இந்த நாட்களில் வாக்காளரே தாமாக முன்வந்தோ அல்லது கழகத் தினரோ வாக்காளர் பட்டியலில் உள்ள வாக்களர்களின் விவரங்களை சரிபார்த்து விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும் 01012025 அன்று 18 வயது நிரம்ப கூடிய புதிய வாக்காளர்களும் அவர்களது பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்ள அதற்கான படிவங்களை பெற்று பூர்த்தி செய்து அந்தப் படிவங்களை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் கொடுக்க வேண்டும். இதனஅடிப்படையில் 01-01-2025 ம் தேதி 18 வயது நிரம்பியவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம்பெறாத பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்து உள்ளவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம்பெயர்ந்த வாக்காளர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும் தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தலுக்கு படிவம் 6 ம், பெயர் நீக்கம் செய்திட படிவம் 7 ம் வாக்காளர் விவரங்கள் உள்ள தவறுகளை திருத்தம் செய்ய ஒரே சட்டமன்றத் தொகுதிக்குள் திருத்தம் முகவரி மாற்றம் நகல் வாக்காளர் அட்டை பெற படிவம் 8 ம் அயல் நாடு வாழ் வாக்காளர் சேர்க்க படிவம் 6 A, ஆதார் எண், வாக்காளர் அடையாள அட்டையுடன் இணைக்க படிவம் 6 B விண்ணப்பம் பூர்த்தி செய்து அளித்திட வேண்டும். இது வரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாதவர்கள் மற்றும் இடம் மாறி வந்து வாக்காளர்களாக சேர்க்க விரும்பு பவர்களும், பெயர் சேர்த்துக்கொள்ள வேண்டிய விண்ணப்பப் படிவமான படிவம் 6 முழுமையாக பூர்த்தி செய்திட வேண்டும். குறிப்பாக படிவம் 6 ன் காலம் IV மனுதாரரது முந்தைய முகவரி தவறாது எழுதிட வேண்டும்.

வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் 29.10.2024

பெயர்களைச் சேர்க்க/ நீக்க/ திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்க கால அவகாசம் 29.10.2024 முதல் 28.11.2024 வரை.

சிறப்பு முகாம் நடைபெறும் நாட்கள் நவம்பர் 16 17 தேதிகள் மற்றும் நவம்பர் 23 24 ஆகிய தேதிகளில் நடை பெற உள்ளது.

இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடும் நாள் 06.01.2025

மேலும் மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு பணியிலும், சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களிலும் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழ உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், வார்டு, வட்ட, கிளை கழக செயலாளர்கள், கவுன்சிலர்கள் மற்றும் வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) உள்ளிட்ட கழகத் தோழர்கள் அனைவரும் தங்களை முழுமையாக ஈடுபடுத்தி இந்த பணிகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் இந்த பணியின் விவரங்களை அவ்வப்போது மாவட்ட கழகத்திற்கு தெரிவிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வாக்காளர் சேர்க்கும் பணியின் போது நமது கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள (BLA2) மற்றும் பூத்கமிட்டி உறுப்பினர்கள் (BLC) ஆகியோர் இந்தப் பணியினை முழுமையாக ஈடுபட்டு 2026 சட்டமன்றத் தேர்தல் வரை தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள (BLO) க்களுடன் உடன் இருந்து கண்காணிக்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. அறிவித்துள்ளார்.

புதுக்கோட்டையில் கூட்டுறவு மெகா பட்டாசுக் கடை!

அமைச்சர் எஸ்.ரகுபதி - கே.கே.செல்லப்பாண்டியன் திறந்து வைத்தனர்!

புதுக்கோட்டை, அக்.27-

புதுக்கோட்டை மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையில், கூட்டுறவு மெகா பட்டாசுக் கடையினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி , மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா தலைமையில் (24.10.2024) அன்று திறந்து வைத்து, முதல் விற்பனையினை துவக்கி வைத்தார்.

பின்னர் அமைச்சர் தெரிவித்ததாவது;

புதுக்கோட்டை மாவட்டம் முழுவதும் மொத்தம் 8 பட்டாசுக் கடைகள் திறக்கப்பட்டு, இந்தாண்டு தீபாவளிக்கு AYYAN, STANDARD, WE TWO, ANIL ஆகிய நிறுவனங்களின் புதிய தயாரிப்பு பட்டாசு வகைகள் அனைத்தும் விற்பனை செய்யப்படவுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் சென்ற ஆண்டு ரூ.45 இலட்சம் பட்டாசு விற்பனை செய்யப்பட்டது. இந்தாண்டு பட்டாசு விற்பனை இலக்கு ரூ.1.25 கோடி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

எனவே பொதுமக்கள் அனைவரும் கூட்டுறவு மெகா பட்டாசுக் கடையில் தரமான பட்டாசுகளை வாங்கிக் கொள்ளலாம் எனவும் அமைச்சர் எஸ்.ரகுபதி அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன் , புதுக்கோட்டை மாநகராட்சி துணை மேயர் எம். லியாகத் அலி, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் ஜெயலட்சுமி தமிழ்செல்வன், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ஜீவா, வட்டாட்சியர் பரணி, மஹாராஜ் பேக்கரி உரிமையாளர் சி.அருண் ராஜ் மற்றும் ஆ.செந்தில், அரு.வீரமணி, க.மதியழகன், சுப.சரவணன், என். சாத்தையா, அ.ரெத்தினம், மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

நினைவை விட்டு நீங்கா எங்கள் நெஞ்சத்திற்கு

12-ம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் 05.09.1939

நினைவு 27.10.2012

A.L.சுப்பிரமணியன்

B.Sc.,B.L.,Ex. M.L.A,Ex.Mayor

தி.மு.கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்

செயலர், திருநெல்வேலி கல்வி சங்கம் ம.தி.தா.இந்துக்கல்லூரி மற்றும் மேல்நிலைப்பள்ளி

E.X.தலைவர் திருநெல்வேலி வழக்கறிஞர் சங்கம்.

A.L.S.லெட்சுமணன் A.L.S.சண்முகம்

தலைமை செயற்குழு உறுப்பினர்,

முன்னாள் மாநகர செயலாளர்,

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், திருநெல்வேலி.